**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 390/2016</u>**

நாள் 11.02.2026

DW1 – கே. முத்துசாமி

த/பெ – குங்கா கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of February 2026)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது எதிர்வழக்குரையிலும், எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் அமுலுக்கே வரவில்லை என்றும், அந்த செட்டில்மெண்ட் ஆவணம் சட்டத்தின் முன் செல்லாது, இல்லா நிலையது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிக்கு உள்ள உரிமையை மறைத்து நானும், மற்ற பிரதிவாதிகளும் சேர்ந்து அ.வ.எண்.19/2004 என்ற வழக்கை தாக்கல் செய்து பெற்ற ஒருதலைபட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை செல்லாது என்றால் சரியல்ல. அந்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வாதிக்கு தாவா சொத்தில் உள்ள உரிமையை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து வாதி பெயரில் உள்ள ஆவணங்களை மறைத்து தான் அந்த அ.வ.எண்.19/2004 என்ற வழக்கை தாக்கல் செய்து ஒருதலைபட்சமாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பெற்றுள்ளோம் என்றும், அதனால், அந்த வழக்குரையை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளாகிய நாங்கள் செம்மாண்டம்பாளையம் அருள்மிகு விநாயகர், மாரியம்மன் கோவில் சார்பாக தான் எதிர்வழக்காடுகிறோம் என்றால் சரிதான். இந்த நிலையில் செம்மாண்டம்பாளையம் அருள்மிகு விநாயகர், மாரியம்மன் கோவிலை

இந்த வழக்கு தரப்பினராக கட்சி சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. அதனால், தாவா சொத்துக்களில் கோவிலோ, நாங்களோ எந்த காலத்திலும் உரிமையோ, சுவாதீனமோ இருந்து வந்தது கிடையாது என்றால் சரியல்ல. அதனால், வாதி தாவாவில் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.02.11 15:05:59 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**